TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் X.] **FEBRUARY, 1910-௵ பெப்ருவரி௴.** [இலக்கம் 1.

புதிய வருஷத்து மங்கல வாழ்த்து.

இப்புதிய வருஷாரம்பத்தில் இப்பத்திரிகையைப் படிப்பவ ரெல்லோருக்கும் ஜீவகாருண்யத்துடன் மற்றெல்லாச் சற்குண சம்பத்துகளும் உண்டாக வேண்டுமென்றும், அவர்களுடைய சிறு மக்கட்கேயன்றிச் சகல ஜனங்களுக்கும் ஜீவராசிகளிடம் அன்பு பாராட்டுதலென்னும் சன்மார்க்கத்தை அவர்கள் நன்றாய்ப் போதிக்க வேண்டுமென்றும், அவர்களாலும் அவர்களுடைய பந்துஜன இஷ்ட மித்திரர்களாலும் இச்சங்கத்துக் காரியங்களுக் குபகாரமாய்ப் பொருளுதவி முதலியவை மிகுதியாய்க் கிடைக்கும்படி யவர்கள் முயல்வாராகவென்றும் ஆதிமூலக் கடவுளை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

சென்னை ஜீ. ஹி. நி. சங்கத்தின் 1909–ம் வருஷத்து ஜந்து விநோதக் காட்சி.

கடந்த பல வருஷங்களைப் போலவே சென்ற 1909-ம் வருஷத்திலும் டிசம்பர் மாதம் 18-ம் தேதி சனிக்கிழமை யன்று சென்னை ஜிம்கானா மைதானத்தில் வழக்கப்பிரகாரம் அநேக ஜந்துக்களின் காட்சியொன்று மஹிமை பொருந்திய கவர்னர் துரையவர்களாகிய சர் ஆர்தர் லாலியவர்கள், அவருடைய தேவியார் இவர்களுடையவும் மற்றுஞ் சிலருடையவும் உதவியினால் அதி விமரிசையாக நடந்தது. அவ்விநோதத்தைப் பார்க்க அநேகம் பிரபுக்களும், ஜமீன்தார்களும், ஐரோப்பிய சுதேசிய கனவான்களும் வந்திருந்தார்கள். இப்படி யநேகர் வந்திருந்து இக்காட்சியை நடத்தியதைக் கவனிக்கும்பொழுது இச்சங்கத்தின் காரியங்களில் ஜனங்களுக்கு வருஷத்துக்கு வருஷம் ஊக்கமதிகரித்து வருகிறதென்பதற்குச் சந்தேகமே யில்லை. இக்காட்சிக்கு அநேகவிதமான ஜந்துக்கள் கொண்டுவரப்பட்டன. காட்சி முடிந்தபிறகு முன்னமே ஜட்ஜிகளாக நியமிக்கப்பட்டவர்களின் அபிப்பிராயப் பிரகாரம் மேலான பிராணிகள் என்று நிச்சயிக்கப்பட்டவைகளைக்கொண்டுவந்தவர்களுக்கு அவரவர்க்குத் தக்கபடி வெகுமதிகளளிக்கப்பட்டன.

அச்சமயத்தில் ஏ. ரத்தினா அண்டு கம்பெனி என்னும் பொடக்கிராப் கம்பெனியார் அநேக படங்கள் எடுத்தார்கள். இக்காட்சி யதி விமரிசையா யிருக்கும்படியான ஏற்பாடுகளை அநேகநாளாய் அதிகப் பிரயாசையெடுத்துச் செய்த இச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய கனம்பொருந்திய ஐகோர்ட்டு பெரிய ஜட்ஜிகளாகிய ஸர் ஆர்னால்டு ஒயிட் துரையவர்களுக்கும், காரியதரிசியாகிய ரென்காண்டர் துரையவர்களுக்கும் நாமெல்லோரும் மனப்பூர்வமாய் அநேக வந்தனங்களளிக்கவேண்டும்.

கல்வியறிவில்லாதவர்கள் மிருகங்களினுபயோகத்தை யறியாதவராய் அவைகள் மூப்பினாலாவது, களைப்பினாலாவது அல்லது நோயாலாவது வேலைசெய்யாம லிருந்தால் அவைகளை ஹிம்சித்து வேலை வாங்குகிறார்

கள். அந்த ஹிம்சையைப் பொறுக்கமுடியாமல் அவை நாளுக்குநாள் மெலிந்துபோகின்றன. ஆகையினால் வெகுமதிகளுக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டாவது சாதாரண ஜனங்கள் வாயில்லா மிருகங்களையும் பறவைகளையும் அன்புடன் பாதுகாப்பார்களென்னு மெண்ணத்துடன் தரும சிந்தையுள்ள கனவான்களுடைய உதவியைக்கொண்டு இச்சங்கத்தாரும், இன்னும் வெளியூர்களி லிருக்கும் உபசங்கத்தாரும் வருஷந்தோறும் அங்கங்கே ஜந்து விநோதக் காட்சிகளை நடத்தி வருகிறார்கள்.

வெகு காலமாக நம்முன்னோர் "அஹிம்சா பரமோதர்ம:" என்னும் தர்மத்தை யுபதேசித்து வந்தார்கள். பூத தயைதான் முக்கியமான மதமென்று அநேகர் அவலம்பித்தார்கள். ஐயோ, ஜனங்கள் மனம் வேறாகும்படித் தயைகுறைந்த ஸ்திதியை அடைவதினால் குதிரைகள், எருதுகள் முதலிய பிராணிகளைக் கொரேமாய் ஹிம்சிக்கிறார்கள். ஆயினும், எல்லாப் பிராணிகளுக்கும் ஸர்வேசுவரனே தந்தையென்று எம்மதத்தாரும் அங்கீகரிப்பார்களாகையால் ஒவ்வொருவரும் ஜீவ ஹிம்சை நிவாரணத்திற்காகத் தங்களாலியன்றமட்டும் பாடுபடவேண்டும்.

திமிங்கிலம்.

திமிங்கிலம் சகல பிராணிகளிலும்பெரிது. பூரண வளர்ச்சியடைந்த பெரிய திமிங்கிலம் நீளத்தில் நூறடியும் குறுக்களவில் முப்பத்தைந்து அடியும் இருக்கும். அதன் வாலின் நீளம் உடம் பிறுதியிலிருந்து ஐந்தடி இருக்கும்; அகலம் இருபத்து நான்கடி. அதன் வாய் விரிவு பதினைந்தடி நீளம், பத்தடி உயரம். அதன் அங்காத்தவாயில் ஒரு மனுஷன் துரகாருடனாய் நிற்கலாம். பருத்துப் பலிஷ்டரான நூறு மனுஷருடைய எடைக்கு அதன் எடை சரியாயிருக்கும்.

திமிங்கிலம் வடிவத்தில் மச்சத்தை ஒத்திருப்பதனாலும், ஜலத்தில் சஞ்சரிப்பதனாலும், அதை மச்சமென்றே நெடுங்காலம் எண்ணியிருந்தார்கள். அது மச்சமன்று. மிருகமென்று இப்பொழுது தெரியவருகிறது. மச்சங்கள் தண்ணீருக்குள்ளே சுவாசம் விடும், சுவாசம் வாங்கும். திமிங்கிலமோ நீர்ப்பரப்புக்குமேல் வந்துதான் வாயுவை உள்வாங்கும். ஒரு மணிநேரம் கடலுக்குள் ளிருக்கும்படிச் சம்பவித்தால், அது செத்துப்போம். அரைமணிக் கொருமுறை சுவாசம் விடும்படி மேலே வரும்.

மீன்கள் முட்டையிடும். திமிங்கிலம் மிருகங்களைப்போலக் குட்டிபோடும். தாய்த் திமிங்கிலம் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும்; அதனுடைய இரத்தமும் மிருகங்களுடைய இரத்தத்தைப்போலச் சிவப்பாயிருக்கும்.

திமிங்கிலத்திலிருந்து மனுஷனுக்கு மிகவும் உபயோகமான இரண்டு பொருள்கள் அகப்படுகின்றன. ஒன்று கொழுப்பு. அதைக்கொண்டு எண்ணெயும் வர்த்தியும் செய்கிறார்கள். மற்றது பல்லுக்குப் பதிலாய் அதன் வாயில் அமைக்கப்பட்டிருக்கும் திமிங்கில முள் என்னு மொரு பொருள். அதனாற் சீப்பும் கத்திப்பிடியுஞ் செய்கிறார்கள்.

கடலோடிகள் படவிலிருந்து திமிங்கில வேட்டை யாடுவார்கள். திமிங்கிலம் சுவாசம் வாங்கும்படிச் சமுத்திரத்து மேற்பரப்பில் வருஞ் சமயங் காத்திருந்து நீண்ட கயிறு கட்டியிருக்கும் பெரிய ஈட்டியை அதில் வலிவுடன் பாய்ச்சி, அது வாலத்தாற் சமுத்திரத்தைப் புடைத்து மலை யெனும்படி அலையை எழுப்பி முழுகி மிதந்து ஓடியாடித் தத்தளித்துத் தளர்ந்து களைத்துப் போகும்வரையில் அந்தக் கயிற்றை வேண்டியவரையில் விட்டுக் கொடுத்துக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்வார்கள். களைப்படைந்ததும் சுவாசம் விட்டு வாங்கும்படி மறுபடியும் மேலே வரும். உடனே அதன்மேல் அநேக ஈட்டிகளைப் புதைய எறிந்து அதை வதைப்பார்கள்.

ஆனாலும் சில சமயங்களில் திமிங்கிலம் தன் பலமான வாலினாற் படவைத் தாக்கிக் கவிழ்த்துப்போடும். அதிலுள்ளவர்கள் முழுகி இறந்துபோவார்கள். திமிங்கில வேட்டம் மிக அபாயகரமானது.

ப்ளோ, பிளாஷி என்னும் நாய்கள்.

லண்டன் மகா நகரத்துக்குத் தெற்கே சுமார் 60 மைல் தூரத்தில் மிகவும் நேர்த்தியான ஒரு துறைமுகப்பட்டண மிருக்கிறது.

அவ்வூருக்கு ஒருதடவை நான் போயிருந்தேன். அங்கே ஒருநாள் காலையில் கடற்கரையோரமாய் நான் உலாவிக்கொண்டிருக்கையில் அங்கே வியாபாரிகள் வந்து சரக்குகள் ஏற்றுவதும் இறக்குவதும் மற்றும் சிலர் வேடிக்கை பார்க்க வருவதும் போவதும் முதலான அமளியின் நடுவில் அதிக உருக்கத்தை யுண்டாக்குவதும் புலம்புதல் போன்றதுமான ஒரு சப்தம் கேட்டேன். அது இன்னதென் றறிய ஆவலுடையவனாய் அவ்வோசை வருகிற திசையை நோக்கிச் சென்று பார்த்தபொழுது அது அங்கே யொரு யௌவன புருஷன் வாசித்துக்கொண்டிருந்த வாத்தியப்பெட்டியினின்றும் உண்டான சப்தமாயிருந்தது. அந்த வாத்தியக்காரனுடைய முகத்தைப் பார்த்தவுடனே அவன் அந்தகனென்று புலப்பட்டபோதிலும் அக்குருட்டுக்கண்கள் அவனுடைய முகத்தின் அழகைச் சிறிதேனும் குறைக்கவில்லை. அவனுடைய வாத்தியப் பெட்டியின்மேல் அழகான நாயொன்று உட்கார்ந்திருந்தது. அதன் கழுத்தில் ஒரு வெள்ளிப் பட்டையும் நீல மணிகள் கோத்த ஹாரமொன்றும் போடப்பட்டிருந்தன. நான் அந்த நாயின் அழகையும் அதன் எஜமானனுடைய முகத்தையும் பார்த்துக்கொண்டே யிருக்கையில் ஒரு துரைசானி அந்த நாயண்டை சென்று அதற்கெதிரில் வைத்திருந்த ஒரு சிறு தகரப்பெட்டியில் ஒரு காசைப் போட்டாள். உடனே அந்த நாய் அப்பெட்டியைத் தன் வாயில் கௌவிக்கொண்டு மூன்று கால்களில் நின்றுகொண்டு ஒரு காலினால் தன் எஜமானனைத் தடவ, அவன் அந்தக் காசை எடுத்துத் தன் சட்டைப் பையில் போட்டுக்கொண்டான். பிறகு அந்த நாய் அச்சிறு பெட்டியை மறுபடியும் தன் எதிரில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தது. இப்படியே ஜனங்கள் காசைப் போடும்போதெல்லாம் அது முன்போலவே எடுத்துக் கொடுத்துக்கொண்டிருந்தது. இந்த வேடிக்கையைப் பார்க்கப் பின்னும் இஷ்டம் வரவே நான் அங்கேயே கொஞ்சநேரம் நின்றுவிட்டேன். பிறகு யாருமில்லாத சமயத்தில் நான் அவ்வந்தக வாத்தியக்காரனோடு சில வார்த்தைகளாடவே அவன் தன் விருத்தாந்தத்தைச் சொன்னான். சுமார் இருபத்துநான்கு வருஷங்களுக்குமுன் அவன் பதினான்கு வயதுள்ள சிறுவனாயிருந்தபோது தன்னுடைய கண்களில் துப்பாக்கிக் குண்டு ஒன்று தற்செயலாய் வந்து தாக்கவே, அவன் குருடனாய்விட்டானாம். அவனுக்கு மனைவியும் இரண்டு பெண் குழந்தைகளும் இருக்கின்றார்கள். இந்த (Flo) ப்ளோ என்னும் நாயின் உதவியினால்தான் அவர்களுடைய ஜீவனம் நடந்துவருகிறது. இதற்குமுன் வேறொரு நாய் அவனிடத்தி லிருந்து சுமார் ஐந்து வருஷங்களுக்குமுன் அது இறக்கவே, இதை யறிந்த ஒரு கனவான் தான் வளர்த்துக்கொண்டிருந்த ப்ளோவை அவனுக்கு இனாமாகக் கொடுத்தாராம். இதுவரையில் கனவான் வீட்டில் அதிக சுகத்தோடு வளர்ந்துவந்த ப்ளோ என்னும் நாயும் இப்பொழுது தன்னுடைய புது எஜமானனுடைய வீட்டில் தனக்குக் கிடைக்கிற சுகங்கள் கொஞ்சமா யிருந்தபோதிலும் அதைச் சிறிதும் கவனியாமல், அவனிடத்திலும் அதிக விசுவாசமுடையதாய்த்தான் அவனுக்குச் செய்யவேண்டிய வேலையைச் சரியாய்ச் செய்து வருகிறதாம். அதன் எஜமானனிடத்தில் ப்ளோவுக்குள்ள அன்பு மிகவும் வியக்கத்தக்கது. அது வேறு யாருடனும் வெளியே செல்லுகிறதில்லை. அதன் எஜமானனை வீட்டிலிருந்து வாத்தியம் வாசிக்கவேண்டிய இடத்திற்கு அழைத்துச் செல்லும்போது ஜனக்கூட்டத்தில் அவன் இடிபடாதபடி வெகு ஜாக்கிரதையா யழைத்துக்கொண்டு போகும். அவ்விடம் போய்ச் சேர்ந்தவுடன் அது ஒருதரம் குரைத்து அவ்வந்தகன் வாத்தியப் பெட்டியைக் கீழே இறக்கினவுடன் அதன் மேலேறிப் பணம் சேகரிக்கிற வேலையில் அதிக ஊக்கத்துட னிருக்குமாம். பெட்டியில் காசுகள் வந்து விழும்போதெல்லாம் ப்ளோ எழுந்தெழுந்து எஜமானனிடத்தில் கொடுப்பதினால் கூட்டம் அதிகமாய் வரும்போது ப்ளோவுக்கு ஓய்ச்சலே யிருக்காது. அச்சமயங்களில் அதன் எஜமானன் அதைத் தடவிக்கொடுத்து முத்தமிடுவான். அப்பொழுது அது தன் முகத்தை அவனுடைய காதண்டை வைத்து "எனக்குக் கஷ்டமில்லை" யென்று சொல்லுவதுபோல் தேய்த்துக் கொஞ்சுமாம். சிலவேளைகளில் விளையாட்டுத்தனமுள்ள சிறுபிள்ளைகள் வந்து அதைச் சுற்றிக்கொண்டு ஏதாவது குறும்புகள் செய்வார்கள். அச்சமயங்களில் ப்ளோ தன் வாலை யாட்டிக்கொண் டெழுந்து "நீங்கள்

தயவுசெய்து போய்விடுங்கள், என் வியாபாரத்தைக் கெடுக்கவேண்டாம்" என்று சொல்லும் பாவனையாக மெதுவான குரலோடு குரைக்கும். உடனே அச்சிறுவர் போய்விடுவார்கள். ஆனாலும், ப்ளோ மிகவும் பகுத்தறிவுள்ள நாய். ஆதலால் வருகிற சிறுவர் பணக்காரப் பிள்ளைகளா யிருந்தால் அவர்களை ஓட்டிவிடுகிறதில்லை. அதிக பழக்கமுடைய ஜனங்கள் யாராகிலும் வந்தால் அவர்களை அழைப்பதுபோல் தான் கீழே இறங்கிவந்து அவர்களுடன் விளையாடும். ப்ளோவுக்கு பிஸ்கோத்து தின்பதில் வெகு பிரியம். இதை யறிந்த சிலர் தாம் வரும்போது பிஸ்கோத்துகளைக் கொண்டுவந்து அதற் களிப்பார்கள். ஆனால் ப்ளோவோ அவர்கள் அச் சிறுபெட்டியில் காசைப்போடுகிறார்களா இல்லையா வென்பதைப் பார்த்துக் கொண்டிருந்து அவர்கள் காசு போட்ட பிறகு தான் அவர்கள் கொடுத்த பிஸ்கோத்தைத் தின்னுமாம்.

இவ்வாறு ப்ளோவும் அதன் எஜமானனும் காலைமுதல், பகல் ஒரு மணிவரையி லிருந்துவிட்டுப் பிறகு பகற்போஜனத்திற்காக வீட்டுக்குச் செல்வார்கள். போஜனமான பிறகு ப்ளோ வீட்டி லிருந்துவிடும். மத்தியானத்தில் அந்த வாத்தியக்காரன் வெளியே செல்லவேண்டியிருந்தால் ப்ளோவின் குட்டியாகிய ப்ளாஷி என்னும் நாயை அழைத்துச் செல்வான். ப்ளாஷியும் தன் தாயைப்போலவே அதன் எஜமானனை வெகு ஜாக்கிரதையா யழைத்துச் சென்று தானும் வாத்தியப் பெட்டியின்மே லுட்கார்ந்து பணம் சம்பாதிக்குமாம். இதற்குச் சிறு பிள்ளைகளிடத்திலதிகப் பிரியமாதலால் அவர்கள் வந்தால் அவர்களைத் துரத்தாது. ப்ளாஷிக்கு அதன் எஜமானனுடைய ஏழு வயதுள்ள குமாரத்தியினிடத்தில் அதிக அன்பு. அவள் சாமான் வாங்கக் கடைக்குப் போகும்போதெல்லாம் அவளுடைய கூடையைத் தன் வாயில் கௌவிக்கொண்டு போய் அவள் வாங்குகிற பொருள்களை யெல்லாம் ஒன்று விடாமல் வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்கும்.

இப்படிப்பட்ட விசுவாசமும், நன்றியும், நல்லறிவுமுள்ள நாய்களின் சரித்திரத்தைக் கேட்டபிறகு யார்தான் வாயில்லாப் பிராணிகளிடத்தில் அன்பு பாராட்டாம லிருப்பார்கள்!

ஓர் ஐரோப்பியர்.

இந்திய இறகு வியாபாரம்.

ஐரோப்பாவில் துரைசானிகள் தங்கள் தலையுடுப்பில் இறகுகளை அணிந்துகொள்ளுகிற வழக்கமானது இந்தியாவில் ஏராளமான பக்ஷிகளின் கொலைக்குக் காரணமாயிருக்கிறதென்கிற அபிப்பிராயம் வெகுநாளா யநேகருக் கிருந்தமையால், இங்கிலாந்தில் வேல்ஸ் இளவரசி (Princess of Wales) முதற்கொண்டு அநேக சீமாட்டிகளும் மற்றுமுள்ள துரைசானிகள் வெகுபேர்களும் இனித் தாங்கள் இறகுகளால் அலங்கரித்துக்கொள்ளுவதில்லை யென்று தீர்மானித்திருக்கிறார்கள். இது இப்படியிருக்க, சில நாள்களுக்கு முன் பம்பாய் நகரத்து வர்த்தகர் பலர் சேர்ந்து, ஸீ கஸ்டம்ஸ் ஆக்ட்டில் நெருப்புக்கோழி தவிர மற்றப் பறவைகளின் தோலையாவது இறகுகளையாவது ஏற்றுமதி செய்யக்கூடாதென்று கண்டிருக்கிற நிபந்தனையினால் அவ்வர்த்தகர்களுக் குண்டாயிருக்கும் பெருத்த நஷ்டத்தைப்பற்றி இந்திய கவர்ன்மெண்டாருக்கு ஒரு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தில் சொல்லியிருக்கிற அம்சங்களில் முக்கியமானவை, அப்படிப்பட்ட நிபந்தனையிருந்தும், ஐரோப்பிய நாடுகளுக்குத் தேவையாயுள்ளளவு இறகுகளும் தோல்களும் இரகசியமாகவோ, இந்தியாவிலுள்ள அந்நிய தேசத்தாருடைய துறைமுகங்களிலிருந்தோ ஏற்றுமதியாகிக்கொண்டுதான் வருகிறதென்பதும், இறகுகளுக்காகக் காட்டுப் பறவைகளை வேணுமென்றே கொல்லுகிறார்களென்பது தப்பான அபிப்பிராயம் என்பதுமே. காட்டுப் பக்ஷிகளில் பெரும்பான்மைக்கு ஏதோ ஒரு பருவத்தில் பழைய இறகுகளும் தோகைகளும் தாமாகவே உதிர்ந்து, புதிய இறகுகளும் தோகைகளும் முளைக்கிறதுண்டு. அவ்வாறு உதிர்கிற இறகுகளைக் குறவர் முதலிய காட்டு ஜனங்க ளெடுத்துக்கொண்டு போய்ச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பார்கள். அதை அவர்களிடத்திலிருந்து பெரிய வர்த்தகர்கள் வாங்கிப் பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்வார்கள். இப்பொழுது பிரிட்டிஷ் துறைமுகங்களில் ஏற்றுமதி செய்யக்கூடாமையால் அந்நிய துறைகளில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனபோதிலும் நேராக இந்தியாவிலிருந்து

இங்கிலாந்துக்கு இறகுகளை யனுப்புவது கூடாததா யிருப்பதனுல் வருஷத்தில் பதினைந்து லக்ஷம் ரூபாய் பெறுமான இந்திய இறகு வியாபாரம் நின்றுவிட்டதாம். காட்டுப் பறவைகளின் தொகுதி குறைந்து போய் விடும் என்ற அபிப்பிராயத்தோடு இந்திய கவர்ன்மெண்டார் இந்த நிபந்தனை ஏற்படுத்தியிருக்கும் பட்சத்தில், அவை முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கிற பருவம் தவிர மற்றப் பருவங்களில் இறகுகளை ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுக்கலாமென்று அவ் வியாபாரிகள் விண்ணப்பித்துக் கொள்கிறுர்கள். கொஞ்ச நாளைக்குமுன், இங்கிலாந்தில் நெருப்புக்கோழி, எயிடர் வாத்து (Eider duck) இவைபோன்ற சிலவகைப் பறவைகள்தவிர மற்றவைகளின் இறகுகளை இறக்குமதி செய்யக்கூடாதென்று ஒரு சட்ட மேற்படுத்த முயன்ருர்கள். அப்படிச் செய்வதனுல் ஒரேஜாதிப் பறவைகளே மிகுதியாய் நாசமடையுமாதலால் அவ்வாருன சட்டங்கள் கூடாதென்று சிலர் மறுக்கவே சட்ட மேற்படுத்த முடியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட விஷயங்களில் சட்ட மேற்படுத்துவதில் அநேக கஷ்டங்கள் தோன்றுமாதலால், இந்திய கவர்ன்மெண்டார் பம்பாய் வியாபாரிகளின் விண்ணப்பத்தைக் கவனிப்பதில் பாரெஸ்டு இலாகாதார்களுடன் ஆலோசனை செய்து இந்தியாவிலுள்ள அழகான காட்டுப் பக்ஷிகளின் சந்ததி யற்றுப்போகாம விருப்பதற்காகத் தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களென்று கோரப்படுகிறது.

சிறுத்தையும் ஒரு பெண் குழந்தையும்.

சென்ற அக்டோபர் மாதம் 25-ந் தேதி யன்று சிலோனில் ஹம்பந்தோட்டா டிஸ்டிரிக்டில் மேற்குக் கிருவப்பட்டுவிலுள்ள தலப்பத்கண்டா என்னும் கிராமத்திலிருக்கும் ஒரு ஸ்திரீ தன் வீட்டுவேலை நிமித்தமாக வெளியே போக நேரிட்டது. அப்பொழுது அவளுடைய மூன்று வயதுள்ள பெண் குழந்தை யொன்று அவளுக்குத் தெரியாமல் பின்பற்றிச் சென்றது. அப்படிச் சென்ற குழந்தை அஜாக்கிரதையாய்த் தன் தாய்ச் செல்லும் வழியை விட்டுப் பிரிந்து வேறு கிளைவழி யொன்றைப் பற்றிச் சென்றுவிட்டது. அதுவரையும் தன் தாய்க்குச் சமாசாரம் தெரியாமல் அவள் போன வேலையை முடித்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தாள். பின்னுல் தாயும் தகப்பனும் குழந்தையைத் தேட ஆரம்பித்தார்கள். போலீஸிலும் எழுதிவைத்தார்கள். இவ்வாறு தேடித் திரிபவர்கள், குழந்தையின் காலடியைப்பற்றிச் சிறிது தூரம் செல்லவும், சிறுத்தையின் காலடியும் தோற்றவே, சிறுத்தை குழந்தையைக் கொன்றுவிட்டதாகவே நிச்சயித்துக் கொண்டு வீடுவந்து சேர்ந்தார்கள். குழந்தை தனித்துச் செல்லும்போது அந்தச் சிறுத்தையிடம் சிக்கிக்கொண்டதென்ருலும், சிறுத்தை குழந்தையைக் கொல்லாமலே தன் குகையிற் கொண்டுபோய்ச் சேர்த்தது. ஆனுல் குழந்தைக்குச் சிறுத்தையின் கௌவுதலினுல் சிறிது காயம்மாத்திரம் பட்டது. நல்லகாலமாய்ச் சிறுத்தை குழந்தையின்பேரில் கருணைவைத்து இரைதேடச் சென்றது. அப்போது அவ்வழியேசென்ற அடுத்த கிராமத்து வழிப்போக்கர், அம்மா, அம்மாவென ஒரு குழந்தை அலறியழும் சப்தத்தைக் கேட்டுக் குகையண்டைப் போய்ப் பார்க்கையில் குழந்தை சிறிது காயத்துடன் சுகஜீவியாயிருக்கக் கண்டு எடுத்துவந்து சொந்தக்காரரிடம் சேர்ப்பித்தார்கள். இதை யறிந்த அந்தச் சிறுத்தை குழந்தையிருக்கும் வீடு வந்து சண்டையிட்டதாம். துஷ்ட மிருகத்திற்கும் குழந்தையிடம் கருணை யிருந்ததென்ருல், பஞ்ச அறிவோடுங் கூடியிருக்கும் நாம் ஜீவராசிகளிடத்து அன்பு செலுத்தி இரக்கங் காட்டுவது மிகவும் பொருத்தமாகும்.

கால்நடைகள் மேயும் நிலங்கள்.

திவான் பஹதூர் ஆர். இரகுநாதராவ் அவர்கள் மாடுகளின் மேய்ப்பைப்பற்றிப் பின் வருமாறு ஒரு கடிதம் எழுதியிருக்கிறுர்கள். "மாடுகள் இல்லாவிட்டால் பயிர்த் தொழிலுக்குக் கஷ்டம் உண்டாகிறது. ஆகையால் மாடுகளை நன்ருய்ப் பாதுகாக்க வேண்டும். இதற்காகத்தான் பிரதி கிராமத்திலும் மேய்ச்சல் நிலங்கள் பிரத்தியேகமாய் விடப்பட் டிருக்கின்றன. கிராமங்களின் பழைய கணக்குகளில்மேய்ச்சலுக்காகவிடப்

பட்ட நிலங்களை அநேகங் குடியானவர்கள் தூராக்கிருதமாய் அனுபவித்துவருவதால்இப் பொழுது அநேக விடங்களில்மேய்ச்சல்நிலங் கள் காணப்படுகிறதில்லை. இதுவுமன்றிச் சிலர் உழவுமாடுகளை வருஷம் முழுவதும் வைத்திருப்பதில்லை. சில குடியானவர்களின் எருதுகள் கிஸ்தி பாக்கிக்காக ஜப்தி செய்யப் படுகிறதுமுண்டு. சிலர் உழவேண்டிய பரு வங்களில்மட்டும் எருதுகளை வைத்துக் கொண்டு பிறகு அவைகளை விற்றுவிடுகிருர் கள். பயிரிட்டுக் கிடைத்த வைக்கோலையும் விற்றுத் தாங்களே அனுபவிக்கிருர்கள். இம் மாதிரி செய்வது சிறிதும் விரும்பத்தக்க தல்ல. கிராம சமுதாயங்களுக்காக விடப் பட்டுத் தூராக்கிருதமாய் அனுபவிக்கப்படு கிற நிலங்களை விசாரித் தறிந்து அவைகளை மறுபடியும் கிராம சமுதாயங்களுக்குத் தரு விக்கவேண்டும். அப்படிப்பட்ட நிலங்கள் எந்தக் குடியானவர்க ளனுபவத்தி லிருக் கின்றனவோ அவர்களை அந்நிலங்களைக் கிரா மப் பொது உபயோகத்திற்காக விடும் படிக் கேட்கவேண்டும். ஒருவேளை யவர்கள் கொடுப்பதில்லையென்று சொன்னுல் தூராக் கிருதமாய் அனுபவிப்பதினுல் அந்த நிலங் களுக்கு அதிகத் தீர்வை போடவேண்டும். இந்த வேலை செய்வதில் அதிகக் கஷ்டமிருந்த போதிலும், அவசியத்தின்பொருட்டு அப்ப டிச் செய்வதே உசிதமெனத் தோன்றுகிறது. அவ்வாறு செய்வது தூராக்கிருதமா யனுப விக்கிறவர்கள் தவிர, கிராமத்திலுள்ள மற்ற எல்லாருக்கும் நல்லதென்றே தோன்றும். கிராமங்களில் மேய்ச்சலுக்காக உபயோகப் படத்தக்க புறம்போக்கு நிலமெல்லாம் இப் பொழுது சாதாரணமாய்க்காட்டு இலாகாதார் கள் சுவாதீனத்திலும் மராமத்து இலாகாதார் கள் சுவாதீனத்திலு மிருக்கிறது. அப்படிப் பட்ட நிலங்கள் கிராமத்தார் வசத்திலிருக் கும்படிச் செய்யவேண்டும்.''

சில நாட்களுக்குமுன் லக்னேவில் கூடின ஆலோசனைச் சங்கத்தார் ஐக்கிய மாகா ணங்களில் கால்நடைகளின பாதுகாப்பைப் பற்றி அடியில் வருமாறு சொல்லியிருக் கிருர்கள். ''இந்த மாகாணங்களில் தற் காலம் கால்நடைகளின் விலை அதிகமா யிருப்பதற்கு முக்கிய காரணங்கள், ஜனங் கள் உயர் ஜாதி மாடுகளின் சந்ததியை விர்த்திசெய்யாம லிருப்பதும், பஞ்சமுமே யாம். பஞ்சகாலங்களில் குடியானவர்கள் உழவு மாடுகளைமட்டும் வைத்துக்கொண்டு பசுக்களை விற்றுப்போடுகிருர்கள். சாதாரண மாய் இந்த மாகாணங்களிலேயே விற்பனை யாகும்படியான பசுக்கள் இப்பொழுது கல் கத்தா முதலிய பட்டணங்களுக்கு விற் பனைக்காகக் கொண்டுபோகப்படுகின்றன. உழவு மாடுகளைமட்டும் இவ்விடத்திலே வைத்துக்கொள்வதினுல் அவற்றின் விலை யும் அதிகரித்துவிட்டது. நல்ல கால்நடை களை வைத்துக்கொள்ள விருப்பமிருந்தால் அவைகளின் மேய்ச்சலுக்காக நல்ல நிலங் களை விடவேண்டும். விளைச்சல் பூமி அதிக மாயிருக்கிற கிராமங்களில் கால்நடைகளை விர்த்திசெய்வது கஷ்டமானதால் தற்கால மிந்த ஜில்லாக்களிலிருக்கிற மேய்ச்சல் நிலங் களை யெல்லாம் பாதுகாக்கவும், புதிதாய்ச் சிலவற்றை ஏற்படுத்தவும் ஜமீன்தார்கள் முத லிய தனவான்கள் முயற்சி செய்யவேண்டிய தவசியம். இவ்விஷயத்தில் சாதாரணமான ஏழை ஜனங்கள் முயலுவதில் உபயோக மில்லை.''

ஒரு கழுதைக்குடத்தியின் ஞாபகசக்தி.

கொஞ்சகாலத்துக்குமுன் பம்பாயி லிருந்த மிஸ்டர் பார்டுமோர் என்னும் துரை ஒரு கழுதைக்குடத்தியை வளர்த்து வந்தார். அது மிகவும் சிறிய குட்டியாயிருந்தபோதே அதைச் சில வேலைக்காரர் கொண்டுவந்து கொடுத்தார்களாம். அதுமுதல் அவரிடத் தில் வளர்ந்து வந்தது. அக்குட்டி அவரு டைய பங்களாவைச் சுற்றி விளையாடி வரு வதும் அவருடைய அறைகளில் உலாவி வருவதும் அவருடைய படுக்கை அறையி லேயே படுப்பதுமாயிருக்கும். சில வேளை களில் அவருடன் கூடவே படுத்துக்கொண்டு அவரோடு விளையாடிக்கொண்டு மிருக்கு மாம். அவர் உண்ணும்போது அவருக்கரு கில் தானும் உட்கார்ந்து அவர் கொடுக்கிற உணவுத் துண்டுகளைத் தின்னும். அவர் செல் லும்போதெல்லாம் அந்தக் கழுதைக்குடத்தி ஒரு நாய்க்குட்டிபோல் அவர் பின்னுலேயே திரியும். அது கொஞ்சம் பெரிதானபிறகு அதன் எஜமானன் அதைப் பம்பாயிலுள்ள ஜந்துக்கள் காட்சிச்சாலைக்கு அனுப்பிவிட்

டார். சுமார் ஆறுமாதமானபின் ஒருநாள் மிஸ்டர் பார்டுமோர் துரை அந்த காட்சிச் சாலைக்குச் சென்று தன்னுடைய கழுதைக் குடத்தியை அடைத்திருந்த இரும்புக்கூண்டுக் கருகில் போய் 'டைகோ' என்னும் பெயரெடுத்துக் கூப்பிடவே, அது தன்னுடைய முன் எஜமான் குரலை யறிந்துகொண்டு ஓடி வந்தது. மற்றொரு முறை இன்னொரு மூன்று மாத மானபிறகு அவர் போய்ப் பார்த்த போது அது முன்னிலும் பருத்து அதிக சோம்பலுள்ள தாகிவிட்டபோதிலும், அவருடைய குரலைமட்டும் நன்றாய் ஞாபகம் வைத்திருந்ததாம். இப்படிப்பட்ட கழுதைப் புலி என்னும் காட்டு மிருகங்களுக்கும் ஞாபகமும் நன்றியறிதலு முண்டு.

இராஜாளி, வல்லூறு, கழுகு, பருந்து, காக்கை.

ஐந்துக்களைப் பட்சிக்கிற பறவைகளுள் சிரேஷ்டமானதும், பலமும், வேகமும், வலிய அவயவங்களும் உடையது இராஜாளி. அது வெகு தொலைவில் தன் இரையைக் கண்ணுற்று நிமிஷத்திற்கு ஒரு மைல் பறந்து செட்டையின் ஒரு அடியால் சிறிய மிருகங்களைக் கொல்லக்கூடியது; அது குழந்தைகளையும் தூக்கிக்கொண்டுபோய்த் தின்றுவிட்டதாகப் பரிதாபமான கதைகள் சொல்லுவார்கள். இறைச்சியே அதற்கு இரையாயினும், அது தான் கொல்லுகிற ஜந்துவை மாத்திரம் பட்சிப்பதல்லாமல் செத்த பிணத்தைத் தொடவே தொடாது; ஏறக்கூடாத மலை உச்சிகளில் கூடுகட்டி வாழ்கின்ற இப்பறவை, இந்தியாவில் சஞ்சரிக்கின்ற ஸ்தானங்கள் இமாலயமும் அதன் பக்கத்துப் பர்வதங்களுமாம்.

வல்லூறானது வேட்டைக்கு உதவியாய் வேட்டையாடுகிறவர்களுக்குப் பிரியமாயிருக்கிற பட்சி. அது தேசாந்தரம் சென்று சில பருவங்களில்தான் வருகிறது. பிடிக்கிறவர்கள் அதன் வரவை அறிந்து கடற்கரையில் தகுந்த நிலைதேடி இருந்து, புறாவின் கண்களைத் தைத்து உடலைக் கயிற்றால் சுருக்கிட்டுச் சுருக்கின் இரண்டு முனையையும் பிசின் தடவி இருக்கும் ஒரு கொம்பின் இரு நுனிகளிலும் கட்டி வல்லூறு வந்ததும் தூக்கி எறிவார்கள்; முன்பின் தெரியாமல் இங்கு மங்கும் பறக்கிற புறாவைக் காண்கிற அப்பறவை அதன்மேல் பாயவே அதன் சிறகுகள் பிசினிற் பிடிபட்டு அதுவும் புறாவுமாக உருண்டு பூமியில் விழும். வேட்டைக்காரன் அதை எடுத்துப் பழக்கின பின்னர் கோழிக்குஞ் சளவான வல்லூறு பங்காளவாத் தளவான பெரிய நாரையையும் துணிந்தடித்துக் கீழே விழுத்திவிடும்.

கழுகு கழுத்து மயிரில்லாமல் அவலட்சணமும் அருவருப்புமான கூரிய மோப்பமுள்ள ஒரு ஜாதிப் பெரும் பறவை. இது பிணங்களைத் தின்று ஜீவிக்கும். செத்த மிருகம் எங்கேயாவது கிடந்தால் மோப்பம் பிடித்து வந்து வயிறு கொள்ளாதமட்டும் விழுங்கிப் பறக்கமாட்டாமல் தவிக்கும்.

பருந்தானது கோழி வளர்க்கிறவர்களுக்குத் தொலையாத சங்கடம்; ஜாக்கிரதை சற்றுத் தளர்ந்தால் குஞ்சுகளையும் மற்றச் சிறு பிராணிகளையும் திடீரென்று விழுந்து அடித்துக்கொண்டு பறந்துவிடும். இந்தியாவிலே கழுகும் பருந்தும் காக்கையும் ஜனங்கள் சோம்பலினால் குவியவிடுகிற கழிமலங்களைப் பொறுக்கிப்போட்டு ஓரளவு தோட்டியின் வேலையைச் செய்வதனால் நோய்கள் உண்டாகாமல் தடுத்து மனிதருக்குப் பயன்படுகின்றன.

காக்கை இலேசில் சுடவாவது பிடிக்கவாவது முடியாத துணிகரமும் திருட்டுத்தனமும் தந்திரமுமுள்ள ஜந்து. விடியற்காலம் கோழிகூவிக் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் விழித்துக் காகாவென்று கத்தி வெளிப்படுகிற காக்கையின் சத்தம் கேட்கும்.

சமாசாரக் குறிப்புகள்.

1. **பார்படோஸ் தீவில் குரங்குகள்.** — இத்தீவில் குரங்குகள் கருப்பஞ் சோலைகளை அடிக்கடி நாசஞ்செய்கின்றனவாம். ஒருதடவை ஒரு குடியானவன் தன் கொல்லையில் குரங்குகள் வந்து தும்சம் செய்யவே அவைகளைக் கொல்லும்பொருட்டுத் தன் துப்பாக்கியை யெடுத்துச் சென்றான். அவனைக் கண்டதும் குரங்குகளெல்லாம் பல பக்கங்களினுமோடி யொளித்துக்கொண்டன. ஆனால் அவைகளி லொன்றுமாத்திரம் அது ஏறியிருந்த மரத்துக்கருகில் புதர்கள் இல்லாமலிருந்ததால் ஓடி யொளிய இடமில்லாமல்,

மரத்திலேயே தங்கிவிட்டது. அந்தப் பரிதாபமான குரங்கு தான் அகப்பட்டுக்கொண்டதென் றறிந்து உடனே மரத்துக்கு உச்சியிலிருந்த கிளைக்குச் சென்று அதன் நுனியில் உட்கார்ந்துகொண்டு கீழே யிருந்த மனிதனை உற்றுப் பார்த்தது. அம்மனிதன் துப்பாக்கியை அக்குரங்குக்குநேராகஉயர்த்திச்சுடப் போகிற சமயத்தில், அது தன் முதுகில் கட்டி யணைத்திருந்த அதன் குட்டியை எடுத்துத் தன் முன்வைத்துக்கொண்டு மிகவும் வணக்கத்துடன் அதை யவனுக்குக் காண்பித்தது. அதைக் கண்டதும் அக்குடியானவனுடைய மனமிரங்கி அந்தக் குரங்கைச் சுடாமல் போய்விட்டான்.

2. **யந்திரத்தால் பால் கறக்கிறது.**—அமெரிக்கா தேசத்தில் ஒரு பெரிய கிருஷிச்சாலையில் பால் கறப்பதற்கு ஒரு யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார்களாம். பசுக்களின் முலைக் காம்புகளுக்கு ஒரு ரப்பர் புனலைக் கட்டிவிட்டு அந்தப் புனலிலிருந்து ரப்பர் குழாய்கள் பால் கறக்கும் பாண்டத்திற்குச் சேர்க்கப்படுகின்றன. பிறகு அக்குழாய்க்குள்ளிருக்கும் காற்றை வெளிப்படுத்துகிறார்கள். உடனே பால் அக்குழாய்களின் வழியாய் வந்து பாத்திரத்தில் விழுகிறது. இந்த யந்திரம் மனிதர் கறப்பதைவிடச் சீக்கிரமாய்க் கறக்கிறதாம். இவ்வாறு கறக்கப்படுகிற பால் அதிக நேர்த்தியாயு மிருக்கிறதாம். மற்றொரு நூற்றாண்டுக்குள் கிருஷிக்காரர் அநேகவேலைகளுக்கு யந்திரங்களையே உபயோகிப்பார்களென்பதற்கு ஐயமே இல்லை.

3. **நாய்களுக்குச் சுகங்கள்.**—அமெரிக்கா தேசத்தில் கிடைப்பதுபோல் உலகத்தில் வேறெந்த தேசத்திலும் நாய்களுக்குச் சுகம் கிடைக்கிறதில்லை. ஐரோப்பாவில் பிரயாணிகள் தங்கும் சத்திரங்கள் முதலான இடங்களில் மேன்மையான நாய்களும் தம் எஜமானர்கள் தங்கும் அறையின் ஓர் மூலையில் கிடக்கவேண்டும். அமெரிக்காவில் அப்படிக் கன்று. நாய்களுக்கென்று எல்லா சௌகரியங்களுமுள்ள பிரத்தியேகமான அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வறைகளில் அவைகளுக்கு நடமாடவும், குளிக்கவும், சாப்பிடவும், படுக்கவும் வேண்டிய சுகமான ஏற்பாடுகள் செய்து இருப்பதுடன் அவைகளுக்கு சீதோஷ்ண காலங்களுக்கேற்றபடி உடைகளையும் சித்தப்படுத்தி வைக்கிறார்களாம். இப்பேர்ப்பட்ட ஏற்பாடுகள் செய்வதில் பேர்பெற்ற சத்திரமொன்று பிலடெல்பியா நகரத்தில் பெல்லெவியு ஸ்டிரேட்போர்ட் ஓட்டேல் என்றிருக்கிறது. இதில் நாய்களுக்கு தைக்கும் எல்லாவிதமான ஒரு ஜதை உடுப்புக்கு மாத்திரம் ரூ. 780 கிரயம் ஆகிறதாம்!

4. **நாய்களின் ஆசிரயம்.**—லண்டன் நகரத்தில் திக்கற்றுப் பட்டினியாய்க் கிடக்கும் நாய்களுக்கென்று ஓர் ஆசிரயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வீதிகளில் பேவாரசாய்த் திரியும் நாய்களைப் பிடித்து அவ்வாசிரயத்துக்குக் கொண்டுபோய் வைத்திருந்து போஷித்து வருகிறார்கள். சிலநாளில் அவைகளின் சொந்தக்காரர்கள் தேடிப்போய்க் கேட்டால் அவைகளைத் திரும்பக் கொடுத்துவிடுகிறார்கள். அப்படிக் கேளாத நாய்களில் உயர்ந்த நாய்களைக் காப்பாற்றச் சக்தியும் இஷ்டமும் உள்ளவர்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள். அப்படியு மில்லாமல் நிற்கிற உபயோகமற்ற நாய்களை ஜனங்களுக்குக் கெடுதி நேரிடாமல் அவைகளுக்கு நோவு தெரியாம லிருக்கும்படி அதி சீக்கிரத்தில் சுலபமாய்க் கொன்றுவிடுகிறார்கள்.

புதுவருடத்திய வாழ்த்துக் கவி.

இளையனார் வேலூர் வே. கு. முத்துமாணிக்க முதலியாரவர்கள் பாடியது.

குருபான்சந் நிதிநோக்கு மெவ்வுயிருந் தன்னுயிர்போற் கொண்டிப் பூமேல்
ஒருபரையும் வளர்த்தவெண் ஞான்கிறைன் ரும்விலையீந் துயிரைக் காத்தல்
பெருந்தரும மெனவதன்மாட் டன்புற்று ரின்பமுற்றுப் பெரிதும் வாழ்க!
தாணிமிசை நனிவாழ்க சென்னைஜீ வஹிம்சைநி வாரணச் சங்கமுமே!

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1910.